**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 2-3-2019
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தேசிய உயிர் தொழில்நுட்பவியல் கருத்தரங்கம் - " பயோகான்கரன்சர் 2019 "**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையம் நடத்தும் தேசிய அளவிலான உயிர் தொழில்நுட்பவியல் கருத்தரங்கம் - ''பயோகான்கரன்சா 2019'' - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மார்ச் 1 மற்றும் 2ம் தேதிகளில் நடைபெற்று வருகிறது.

கேரள வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர். சந்திரபாபு அவர்கள், முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு தன்னுடைய உரையில் உணவு உற்பத்தியில் தற்போதுள்ள சவால்களான மாசடைந்த நிலம் மற்றும் குறைந்த நிலத்தடி நீர் அளவு போன்றவற்றிற்கு உயிர் தொழில் நுட்பவியல் மூலம் தீர்வு காண முடியும் என குறிப்பிட்டார்.

முன்னதாக பேராசிரியர் நீ. குமார், துணைவேந்தர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தனது முதன்மையுரையில் மாணவர்கள் தமது தொழில் நுட்பம் மற்றும் படைப்புத்திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். முனைவர் தி. ரகுசந்தர், முதல்வர், மாணவர் நலன், முனைவர். ஜே.எஸ். கென்னடி, முதல்வர், முதுநிலை பட்டப்படிப்பு ஆகியோர் வாழ்த்துரையும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மைய இயக்குநர் முனைவர். எஸ். மோகன்குமார் அவர்கள் முகவுரையும் வழங்கினார்கள்.

பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சுமார் 475 மாணவர்கள் தேசிய அளவில் கலந்து கொண்டனர். மாணவ பிரதிநிதிகள் செல்வன். நந்தகுமார் மற்றும் செல்வி. இந்துமதி ஆகியோர் வரவேற்புரை மற்றும் நன்றியுரை வழங்கினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்